விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 038 வள்ளுவர் ஆண்டு 2055 தை 12 வெள்ளிக்கிழமை (26.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த வாகன விபத்தில் உயிரிழப்பு



(கொழும்பு) கட்டுநாயக்க அதிவேக வீதியின் 11ஆம் மைல்கல் பகுதிக்கருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நிகழ்நிலை சட்டம் அமெரிக்கா கவலை

(வாஷிங்டன்)

பாராளுமன்றத்தில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் அமெரிக்கா தனது கவலையை வெளியிட்டுள்ளது.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் 15



# தமிழ்க் கட்சிகளுக்கு இருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தத் தெரியாது



## நீதி அமைச்சர் விஜயதாஸ சாடல்

*(கொழும்பு)* தமிழ்க் கட்சிகளால்தான் 13ஆவது திருத்தம் பலவீனமடைந்தது. தமிழ்க் கட்சிகளுக்கு இருக்கும் அதிகாரங்களை சரிவரப் பயன்படுத்தத் தெரியாது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ரணில் உறுதியாகவுள்ளார்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது தீவிரமாக செயற் 15

## யாழ்.நகர்ப் பகுதியில் இளைஞனை கடத்த முயற்சி

### ஒருவர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இளைஞன் ஒருவரை கடத்த முற்பட்ட கும்பலைச் சேர்ந்த ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்.நகர் முட்டாஸ்கடை சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம் 15

## யாழில் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கைது

### ஒருவர் தப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பிரஜை ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, 15

## இசைஞானியின் மகள் கொழும்பில் காலமானார்



16

## நாடு முழுவதும் ஏற்றுமதி வலயங்கள் நிறுவப்படும் - ரணில்

(கொழும்பு)

நாடு முழுவதும் ஏற்றுமதி வலயங்கள் நிறுவப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த அபேசேகரராமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதி மதில் மற்றும் தங்கவேலி திறப்பு நிகழ்வில் நேற்று 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 10 - 12 - 1940

இறப்பு 25 - 01 - 2024

## திருமதி சட்டநாதர் நேசமலர்

பிறவளவு, திக்கம், அல்வாய் வடமேற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சட்டநாதர் நேசமலர் அவர்கள் நேற்று (25.01.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சட்டநாதர் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாக்கியம், மாணிக்கம், மனோன்மணி, நவமணி, அரியகுணராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாரதாதேவி, சாந்தினிதேவி, நேசராசா, சறோஜினிதேவி, சற்குணாதேவி, சற்குணராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் வசீகரன், தர்மராசா, பாரதி, முருகதாஸ், இராஜகுரு, துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சண்முகநாதன், பரராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்ஜினி, பிரியதர்ஜினி, பவித்தா, கிரிசாந்தன், தரணிகா, நிறோசன், தனுஜா, பிரியங்கா, ஆரணி, மாதுமை ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் குருநாத், நிருபன் கலைமகள், ரதுசன், தனுசிகா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் சரவணன், சண்முகாசினி, சத்விகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 26.01.2024) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திக்கம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிறவளவு, திக்கம்,
அல்வாய் வடமேற்கு, அல்வாய் (C-8210)

தகவல்:
குடும்பத்தினர்


## விற்பனையாளர்கள் தேவை

எமது பிடவை நிறுவனத்திற்கு பிடவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ளவர்களும் பிடவை வியாபாரம் பழகிய பெண் பிள்ளைகளும் தேவை.

நேரில் வரவும்

**சென்னை பெசன் வேல்ட்**

இல. 63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (C-8208)

## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2150/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (18751)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**




இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவான சிறீதரன் எம்.பி மன்னாரின் அஞ்சலி செலுத்திய போது.

## பெப்ரவரி அமைச்சரவை மாற்றம்

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் அமைச்சரவை மாற்றம் நடைபெறும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கினறன. வரவிருக்கும் தேர்தலைக் கருத்தில் கொண்டு இந்த திருத்தம் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பலருக்கு அமைச்சர் பதவி வழங்குமாறு பசில்ராஜபக்ஷ விடுத்த கோரிக்கைக்கு தலைவணங்கி ஜனாதிபதி இதனைச் செய்வார் என்று கூறப்படுகிறது. (ம-7)


## ரொமேனியா நாட்டில் வேலைவாய்ப்பு

Delivery Boy, மேசன், மாபிள் பொருத்துனர், அலுமினியம் பொருத்துனர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன.
நேர்முகதேர்வின் பின்னர் குறைந்தளவு முற்பணத்துடன் விண்ணப்பிக்க முடியும். கனடாவிற்கு விசிட் விசா தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

**Hybrid International Hub(pvt) ltd Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)
**077 815 5920, 021 222 1265, 076 250 0098** (C-8205)


# 57ஆம் ஆண்டு பிறந்ததின நினைவலைகள்



அமரர்

## யோகறஞ்சினி நகுலேஸ்வரன்

(சுமதி)

பிறப்பு : 26.01.1967
இறப்பு : 19.09.2019



கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
என்றுமே உயிர்வாழும்
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறாது எங்கள் துயர்

" சுமதி இல்லம் "
மூத்த விநாயகர் கோவிலடி,
பொன்னம்பல வித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி. (C-8207)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடித்துறை சார் முதலீட்டு வலயமாக
# வடக்கு மாகாணம் தெரிவு
## விசேட பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

**(கொழும்பு)**

**வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு மீன்பிடித்துறை சார் முதலீட்டு வலயத்தை ஆரம்பிப்பதற்கு சீன நிறுவனமொன்றுடன் விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்நாட்டு ரின்மீன் உற்பத்தியாளர்களின் மேம்பாட்டைக்கருத்திற் கொண்டு ரின்மீன் இறக்குமதிக்கு தடை விதிப்பதற்கும் அண்மையில் தீர்மானித்திருந்தோம்.

வடக்கை அடிப்படையாகக் கொண்டு மீன்பிடித்துறை சார் முதலீட்டு வலயத்தை ஆரம்பிப்பதற்காக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சீனா உட்பட பல்வேறு நாடுகளிடமிருந்து புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் சீன நிறுவனமொன்றுடன் இது தொடர்பில் விசேட பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் வடக்கில் மாத்திரமின்றி மீனவர்கள் வாழும் சகல மாகாணங்களையும் உள்ளடக்கி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதே எமது நோக்கமாகும்.

மேலும் வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்த பிரதான பிரச்சினை தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம்.

இவ்விடயத்தில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு கடற்படைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது" என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த மேலும் தெரிவித்தார். (5-6)



## கந்தகாட்டில் குழு மோதல் கைதிகள் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இரு குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டதையடுத்து கைதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி பொலநறுவை - வெலிகந்தை, கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இரண்டு தரப்பினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

அதனையடுத்து மீண்டும் இரண்டு தரப்பினரும் இரவு மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மோதலில் இருவர் காயமடைந்த நிலையில், சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மோதலையடுத்து கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்து பல கைதிகள் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சுமார் 50 கைதிகளில் 17 கைதிகளை நேற்று காலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், தலைமறைவாகியுள்ள ஏனைய கைதிகளை விசேட அதிரடிப்படையினர் தொடர்ச்சியாக தேடி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

## கணக்காய்வாளர் திணைக்களத்தில் 400 பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

கணக்காய்வு அதிகாரிகளுக்கான சுமார் 400 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வு அதிகாரி பதவிக்கு பொருத்தமானவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, உரிய தகுதிகளுடன் தற்போது அரச சேவை யில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது.

இதற்கான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படவுள்ளது. மேலும் கணக்காய்வு அதிகாரிகளுக்கான பதவி வெற்றிடங்கள் காரணமாக, கணக்காய்வு நடவடிக்கைகளை அதிகபட்ச முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார். (5-6)

## அத்தியாவசிய பொருட்களுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ள பத்திரம்



(கொழும்பு)

20 அத்தியாவசியப் பொருட்களின் தேவை அல்லது குறைபாடு தொடர்பில் எதிர்வரும் வாரம் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் 20 அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பில் நான் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளேன்.

அந்த வகையில் பால்மா, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம் போன்ற நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எமது நாட்டின் உற்பத்திக்கு மேலதிகமாக காணப்படுகின்றதா? அல்லது நாட்டின் தேவைக்கு குறைவாக காணப்படுகின்றதா என்பது தொடர்பிலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பிலும் எம்மிடம் உள்ள பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நாம் அறிக்கையொன்றை வெளியிட உள்ளோம். எனத் தெரிவித்தார். (5-6)

## செய்தித்துளிகள்

### வலம்புரிச் சங்குடன் மூவர் கைது

(கொழும்பு)

வலம்புரிச் சங்கு ஒன்றை விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாகனம் ஒன்றில் வலம்புரிச் சங்கு ஒன்றை எடுத்துக் கொண்டு விற்பனைக்குச் செல்வதாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசத்தில் வைத்து குறித்த சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாக விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. (5-6)

### வர்த்தகர்களை அச்சுறுத்தி கப்பம் பெற்றவர் கைது

(கொழும்பு)

கடவத்தை பிரதேசத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக தன்னை வெளிக்காட்டி வர்த்தகர்களிடம் கப்பம் பெற்று வந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே இவ்வாறு மனிதப் படுகொலைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் தடுப்புப் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபர், வர்த்தகர்களுக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தி பணம் பெறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)

### அதிகரிக்கவுள்ள முட்டை விலை



(கொழும்பு)

உள்ளூர் முட்டை ஒன்றின் விலையை 3 ரூபாவால் அதிகரிக்க அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

வற் வரி அதிகரிப்பினால் உள்ளூர் முட்டை உற்பத்திச் செலவு 8 ரூபாவினால் அதிகரித்துள்ள நிலையில், முட்டை ஒன்றின் விலை 3 ரூபாவினால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, கோழிப்பண்ணையில் இருந்து 45 ரூபாய்க்கு விற்கப்படும் உள்ளூர் முட்டை ஒன்றின் மொத்த விலை 48 ரூபாவாக அறவிடப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (5-6)

### யுக்திய நடவடிக்கை 838 பேர் கைது

(கொழும்பு)


நாடளாவிய ரீதியில் கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வரும் பொலிஸாரின் யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில், நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால நடவடிக்கைகளில் 838 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 211 கிராம் ஹெரோயின், 78 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 1,192 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் அஸ்வின் புதிய சாதனை



இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம், உலகக்கிண்ண டெஸ்ட் வரலாற்றில் 150 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற சாதனையை அஸ்வின் படைத் தார்.

ஹைதராபாத்தில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் நேற்று ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் துடுப் பாட்டத்தைத் தெரிவு செய்தது. ஸாக் கிராவ்லே, பென் டக்கெட் இன்னிங்சை தொடங்கினர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 55 ஓட்டங்கள் சேர்த்தது. அஸ்வின் ஓவரில் 35 ஓட்டங்கள் எடுத்திருந்த டக்கெட் LBW முறையில் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து ஸாக் கிராவ்லேயும் (20) அஸ்வின் சுழற்பந்துவீச்சிலே சிராஜிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க செய்த தன் மூலம் குறித்த சாதனையை படைத் துள்ளார். இதுவரை 96 டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் அஸ்வின் 492 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## சம்பியனான பிரிஸ்பேன் ஹீட்



பிக்பாஷ் லீக் தொடரின் 13 ஆவது சீசன் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இந்த தொடர் கடந்த டிசெம்பர் 7 ஆம் திகதி ஆரம்பமானது. இந்தத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் சிட்னியில் நடைபெற்றது. இதில் சிட்னி சிக்சர்ஸ் அணியும், பிரிஸ்பேன் ஹீட் அணியும் மோதின.

அதன்படி, முதலில் பட்டிங் செய்த பிரிஸ்பேன் ஹீட் அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுக்கு 166 ரன்கள் எடுத்தது. ஜோஷ் பிரவுன் 53 ரன்னும், ரென்ஷா 40 ரன்னும் அடித்தனர்.

சிட்னி அணி சார்பில் சீன் அபாட் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து, 167 ரன்கள் எடுத்தால் சம்பியன் பட்டம் வெல்லலா ம் என்ற இலக்குடன் சிட்னி அணி களமிறங்கியது.

பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் சிட்னி அணி 17.3 ஓவரில் 112 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. இதையடுத்து, பிரிஸ்பேன் ஹீட் அணி 54 ரன்கள் வித்தியாசத்தில் வென்று சம்பியன் பட்டம் பெற்றது. பிரிஸ்பேன் அணியின் ஸ்பென்சர் ஜான்ஸன் 4 விக்கெட்டும் பார்ட்லெட், ஸ்வெப்சன் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது ஸ்பென்சர் ஜான்சனுக்கு வழங்கப்பட்டது.(5-6)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி



வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நவாலி சென்றேஸ் அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து பொலிகை ஒற்றுமை அணியும் மோதவுள்ளன. (5-6-90)

## ஆஸி ஓபன் டென்னிஸ் போட்டி முடிவுகள்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல் போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இந்த தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.


இதில் முன்னணி வீரரான ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வரேவுடன் மோதியதில் அல்காரஸ் 1-6, 3-6, 7-6 (7-2), 4-6 என்ற செட் கணக்கில் ஸ்வரேவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். இதன்மூலம் ஸ்வரேவ் அரையிறுதிக்கு முன்னேறினார்.

அதே பிரிவில் நடந்த மற்றைய காலிறுதி சுற்றில் ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ் ,போலந்து வீரர் ஹூர்ட் ஹர்காக்சுடன் மோதினார்

இதில் இருவரும் தலா 2 செட்களை போராடி வென்றனர்.வெற்றியாளரை நிர்ணயிக்கும் 5ஆவது செட்டை இறுதியில் மெத்வதேவ் 7-6 (7-4), 2-6, 6-3, 5-7, 6-4 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார்.இதேபோல், பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த காலிறுதிப் போட்டியில் உக்ரைனின் டயானா யாஸ்ட்ரீம்கா , செக் வீராங்கனை லிண்டா நோஸ்கோவாவுடன் மோதினார்.

இதில் யாஸ்ட்ரீம்கா 6-3, 6-4 என்ற நேர் செட்களில் நோஸ்கோவாவை எளிதில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் சீனாவின் குயின்வென் ஷெங், ரஷிய வீராங்கனை அன்னா கலின்ஸ் கயா வுடன் மோதினார். இதில் ஷெங் 6-7 (4-7), 6-3, 6-1 என்ற செட்கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து சுதந்திரத்தை ஒடுக்க அரசு கையாளும் புதிய யுக்தி

## சர்வதேச மன்னிப்பு சபை கண்டனம்

(கொழும்பு)

**இணைய பாதுகாப்பு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமைக்கு சர்வதேச மன்னிப்புசபை கண்டனம் வெளியிட்டுள்ளது.**

சர்வதேச மன்னிப்புசபை விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் மனித உரிமைகள் மீதான தாக்குதல் என்றும் இது பரந்த அளவிலான தனிநபர்களின் கருத்துச் சுதந்திரத்தின் மீது கடுமையான பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் கையாளப்பட்டுள்ள புதிய உத்தியாகவே இது அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இணைய பாதுகாப்பு சட்டம் உடனடியாக மீளப்பெற்று அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புசபை வலியுறுத்தியுள்ளது. (5-6)

# ரூ.1.5 பில்லியன் செலவில் சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரம்

(கொழும்பு)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் 11 முக்கிய சந்தைகளில் 1.5 பில்லியன் ரூபாய் செலவில் சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் தலைவர் சாலக கஜபாகு தெரிவித்துள்ளார்.

தமது இலக்கு சந்தைகளில் இந்தியா, சீனா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன், தென்கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் ஸ்கொண்டிநேவிய ஆகிய நாடுகள் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்க்கும் நோக்கில் காணொளிகளை உருவாக்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிறுவனம் உட்பட சமூக ஊடக செல்வாக்கு செலுத்துபவர்களுடன் இலங்கை இணைந்து செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்த ஆண்டில் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலக்காக கொண்டுள்ளது.

எனினும், 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்க்க முடியும் என சுற்றுலாத்துறை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (5-6)

# இலங்கை-தாய்லாந்து வர்த்தக ஒப்பந்தம்

## அமைச்சரவை அனுமதி


(கொழும்பு)

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் முன்வைத்திருந்த நிலையில், அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் இதுவரை 9 சுற்று பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ள நிலையில், சுதந்திர வர்த்தக ஒப்பந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது. (5-6)

# ஆராய்ச்சி துறைக்காக பட்ஜெட்டில் எட்டு பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு



(கொழும்பு)

தேயிலை மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஆராய்ச்சித் துறைக்காக சுமார் 8 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் 30 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை பயன்படுத்தப்படாத மகாவலி ஏ மற்றும் பி வலயங்களில் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (5-6)

# இராசிபலன்

26.01.2024
தை 12, வெள்ளிக்கிழமை
பிரதமை பின்னிரவு 1.35 மணிவரை
பூசம் முற்பகல் 11.01 மணிவரை

சுபநேரம்-6.36-8.06 மணிவரை
இராகுகாலம்-11.06-12.36 மணிவரை

சந்திராஷ்டமம்
கேட்டை, மூலம்.

**வளவன்**

**மேஷம்** – மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** – இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு, பொருளாதார நலனில் அக்கறை கூடும்.

**கடகம்** – வழிபாட்டில் ஆர்வம் கூடும், சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிம்மம்** – திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

**கன்னி** – வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு

**துலாம்** – வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** – பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**தனுசு** – திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் சுகத்தினைக் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.


**மகரம்** – உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** – ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும் வாய்ப்புண்டு, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மீனம்** – வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், யோகமான நாள்.


**முயற்சியைக் கைவிடாதே, வெற்றி இன்னும் சிறிது தூரம் தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









இணுவில் கந்த சுவாமி கோவில் வருடாந்த தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு நேற்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்ற பால்குடபவனி.

(படங்கள்- சிவசாந்தன்)

# 40 டெங்கு நோயாளர்கள் சாவகச்சேரியில் அடையாளம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இவ்வருடம் முதல் 24நாட்களில் 40 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு மற்றும் கல்வயல் கிராமங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதாகவும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத 30 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்மராட்சியில் டெங்கின் தீவிரத் தன்மையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான வரையான மூன்று தினங்கள் கோவிற்குடியிருப்பு, நாவற்குழி மற்றும் மட்டுவில் கிராமங்களில் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க இருப்பதாகவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (5-6-30)

# கலைக்கதம்ப விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மத்திய முன்பள்ளியின் 49 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மழலைகளின் கலைக் கதம்ப விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் முன்பள்ளியின் தலைவர் தி.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (5-6)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச்சங்க வடமாகாண வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு இலங்கை மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலக மேல்மாடி DPUK குணத்திலக்க அரங்கில் தலைவர் ச. ஞானகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.பிரதம விருந்தினராக பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ்.பிரபாகரன் கலந்து கொள்ளவுள்ளதுடன் நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளது. (5-6)

# கலைஞருக்கான ஊக்குவிப்பு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான உதவியினை வழங்குவதற்கு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் பண்பாட்டு அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக ஊக்குவிப்பு நிதி வழங்கும் நடவடிக்கையினை கலாசாரப் பேரவை மேற் கொண் டுள்ளது இத்திட்டத்திற்கு தர மதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கு தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)

# வெளிநாட்டு பிரஜை ஒருவரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொம்பனிவீதி சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் ஐந்தாவது மாடியின் நடைபாதையுடன் கூடிய பூங்கா ஒன்றில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக கொம்பனி வீதி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுவிசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (5-6)

# புதையல் தோண்டிய 11 சந்தேகநபர்கள் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - தம்புத்தேகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பின்புறத்தில் புதையல் தோண்டியதாக தேரர் உட்பட 11 பேர், புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

சந்தேகநபர்களிடமிருந்து பெக்கோ இயந்திரம், ரக்டர், கார் மற்றும் பூஜை பொருட்கள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-6)

# டெங்கு விழிப்பூட்டல் தொடர்பில் யாழில் இடம்பெற்ற நடைபவனி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடமாகாண சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் குறித்த நடைபவனி காலை திருநெல்வேலி சந்தியில் ஆரம்பித்து டெங்கு நோய் விழிப்புணர்வு நடைபவனி பலாலி வீதி வழியாக பரமேஸ்வரா சந்தியினை அடைந்து அங்கிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் வரை இந்த விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.



விழிப்புணர்வு நடைபவனியில் வடமாகாண சுகாதார பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய் பொலிஸார், சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், நல்லூர் பிரதேச சபையினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது டெங்கு நோய் தொடர்பான பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டதுடன்,பொது சுகாதார பரிசோதகர்களால் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-33)

# இரத்தக்கறை படிந்த வாள்களுடன் 6 பேர் கைது

(கொழும்பு)

முல்லேரியா களனி ஆற்று மாவத்தை சந்தியில் இரத்தக் கறை படிந்த வாள்களுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்று சோதனையிடப்பட்டு 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் இருந்து மூன்று வாள்கள், ஒரு இரும்புக் கம்பி, ஒரு கத்தி மற்றும் இரண்டு தோட்டாக்களுடன் சந்தேகநபர்கள் முல்லேரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகத்துக்கிடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றை சோதனையிட்ட போது இந்த ஆயுதங்களை கண்டெடுத்ததாகவும் முச்சக்கர வண்டியில் பயணித்த 6 பேரையும் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் காய்நகர்த்தலே நிகழ்நிலை காப்பு சட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் முதல் வேலையாக நிகழ்நிலைக் காப்பு சட்டம் மீளப்பெறப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல்களை அம்பலப்படுத்தும் குற்றங்களை வெளிப்படுத்தும் நபர்களை இலக்குவைத்தும் அவர்களின் அரசியல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் நோக்கிலுமே நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் அவசர அவசரமாக கொண்டுவரப்பட்டுள்ளது.

இது ஏற்புடைய சட்டமூலம் அல்ல என நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். தனது இருப்பைக் காப்பதற்கான அரசின் நகர்வாகவே இது அமைந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் முதல் வேலையாக நிகழ்நிலைக் காப்பு சட்டம் மீளப்பெறப்படும் எனவும் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார். (5-6)



# புதிய திட்டங்களை மருத்துவ சேவையில் ஆரம்பிக்க தீர்மானம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

மருத்துவ சேவையின் எதிர்காலத்திற்காக அனைத்து மருத்துவ சங்கங்களும் இணைந்து புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்துள்ளன.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், விசேட வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை மருத்துவ நிறுவனம் உட்பட அனைத்து துறைகளின் வைத்தியர்களின் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றதாக, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். இந்த விடயம் குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மக்களுக்கு அதிக சேவைகளை எவ்வாறு வழங்க முடியும்? மருந்துகளுக்கு செலவழிக்கும் பணத்திற்கு நியாயம் செய்வோம், குறைந்த செலவில் இந்தச் சேவையை வழங்குவோம். அதை எப்படிச் செய்வது? என்று விவாதித்தோம்.

இந்த நாட்டில் இலவச சுகாதார சேவையை புதிய அத்தியாயத்திற்கு கொண்டு செல்வதற்கான ஒப்பந்தத்தை எட்டினோம் என தெரிவித்தார். (5-6)

# இரட்டைக் குடியுரிமை எனக்கு இல்லை

## சபையில் ஐ.ம.ச உறுப்பினர்

(கொழும்பு)

தனக்கு இரட்டைக் குடியுரிமை இருப்பதாக தெரிவிக்கப்படும் தகவல்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய எம்.பி. நயன வாசலதிலக கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பதவி விலகியதை அடுத்து, அவரது வெற்றிடத்துக்கு நயன வாசலதிலக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் தனது முதல் உரையை பாராளுமன்றத்தில் நிகழ்த்திய வேளைதான் இரட்டைப் பிரஜா உரிமை கொண்டவர் என்பதாக வெளியிடப்படும் கருத்துக்கள் தொடர்பில் அவர் கடும் விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

எனக்கு இரட்டைப் பிரஜா உரிமை இருப்பதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அடிப்படை ஆதாரமற்றவை. இலங்கையின் கடவுச்சீட்டு மாத்திரமே என்னிடம் உள்ளது எனத் தெரிவித்தார். (5-6)

# இந்திய உயர்ஸ்தானிகர் கண்டிக்கு விஜயம்

(கண்டி)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கண்டி மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.

கண்டி மாவட்டத்திற்கு சென்ற அவரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வரவேற்றார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் மத்திய மாகாண ஆயுர்வேத மருத்துவத் திணைக்களத்தின் வழிகாட்டலினால் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாம் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனையடுத்து, கண்டி ஹந்தான ஸ்ரீ வாணி வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

மேலும் அங்கு நிலவும் குடிநீர் பிரச்சினை மற்றும் அத்தியாவசிய தேவைகளை உடன் தீர்க்க அமைச்சர் ஜீவன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3023

**றேணுகா**

வாழ்க்கை என்பது பரோட்டா மாதிரி தான்... மாவு பிசையும் போதும் சாத்துவானுங்க...



நல்ல வெந்ததுக்கப்புறமும் போட்டு குத்துவானுங்க...

**அபிராமி**




**சர்மி**

இந்த மாதிரி உங்க கிட்சனையும் எப்பவும் கிளீன்னா வைத்து இருக்கனுமா?



சமையல் செய்யாதீர்கள். ஹோட்டல்ல வாங்கி சாப்பிடுங்க...

**மயூரி**

ஒரு பத்து நிமிஷம் இன்சூரன்ஸ் ஏஜன்ட்டு கிட்ட பேசினா உயிரோட இருக்கிறத விட செத்தா தான் ரொம்ப பெனிபிட்ஸ் ன்னு யோசிக்க வைச்சிடுறானுங்க...



**ஆதிவர்மா**

தயவு செய்து சொல்லி தொலைங்கடா...



ஒரு மணிநேரம், இரண்டு மணிநேரம் லவ்வர்கூட அப்படி என்ன தாண்டா பேசுவிங்க?

**கந்தன்**

கம்மன்னு பேசாமல் கொழந்தையாவே இருந்துருக்கலாம்.





பெருசா ஆனால் ஜாலியா இருக்கலாம்ன்னு நெனைச்சது ரொம்ப தப்பு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெய[illegible] facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முதல்நாளே கோடிக்கணக்கிலான காணிக்கைகளை செலுத்திய பக்தர்கள்



(டில்லி)

அயோத்தி ராமர் கோயிலில் முதல் நாள் 5 லட்சம் பக்தர்கள் தரிசித்து பல கோடிகளை காணிக்கையாக செலுத்தியுள்ளனர்.

அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோயிலில், ராமர் சிலையின் பிரான் பிரதிஷ்டை நிகழ்வு கடந்த 22ஆம் திகதி கோலாகலமாக நடைபெற்றது.

இதில், பிரதமர் நரேந்திர மோடி, அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், சாதுக்கள், ஆன்மிக குருக்கள், நடிகர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

இதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை பக்தர்களின் தரிசனத்துக்காக கோவில் நடை திறக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், அன்றைய தினம் சுமார் 5 லட்சம் பக்தர்கள் ராம பிரானை தரிசித்தார்கள் எனவும் அன்றைய தினத்தில் மட்டும் காணிக்கையாக பக்தர்கள் ரூ.3 கோடியே 17 லட்சம் செலுத்தி உள்ளதாக கோவில் அறக்கட்டளை தெரிவித்துள்ளது. (5-6)

## சீனக் கப்பலுக்கான அனுமதியை வழங்கியது

### மாலைதீவு



(மாலே)

இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் உருவாகியுள்ள நிலையில், சீன ஆய்வுக் கப்பலை தமது துறைமுகத்தில் நிறுத்துவதற்கு மாலைதீவு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை உலகரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மாலைதீவில் உள்ள இந்திய இராணுவத்தை திரும்பப் பெறுமாறு இந்தியாவிற்கு மாலைதீவு அரசாங்கம் வலியுறுத்தி இருந்தது.

இந்நிலையில் சீனாவிற்கு சொந்தமான சியாங்யாங் ஹோங் 3 என்ற சீன கப்பலை மாலைதீவில் நிறுத்த சீன அரசாங்கம் அனுமதி கோரியிருந்த நிலையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் சீன ஆய்வுக் கப்பல் மாலைதீவு கடற்பகுதியில் எந்த ஆய்விலும் ஈடுபடாது என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாலைதீவில் உள்ள மாலி துறைமுகத்தில் அடுத்த மாதம் 8ஆம் திகதிக்கு பின்னர் குறித்த சீன கப்பல் நங்கூரமிடும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

உ...

உல...

...

சுவிஸர்...
ளாதார ம...
துறைக்குப...
பணத்தின்...
ரிக்கையின...
Diseas...
இந்தத் ...
அனைத்து...
நோய் ஒப்...
மெனவும்...
தொற்று...

## சீனாவில் பயங்கர தீ விபத்து 39 பேர் பலி, 9 பேர் காயம்



(பீஜிங்)

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில்ஏற்பட்ட தீபரவலில் 39 பேர் பலியானதுடன் 9 பேர் காயமடைந்துள்ளனர். இந்த தீ விபத்து தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் இதுபோன்ற சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சீனாவில் கடந்த ஆண்டிலிருந்து இவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

சீனாவின் மத்திய ஹெனான் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் அண்மையில் ஏற்பட்ட தீபரவலில் 13 சிறுவர்கள் பலியாகினர். பின்னர் அதன் அதிகாரிகள் 7 பேரை அந்த நாட்டுக் காவல் துறையினர் கைது செய்திருந்தனர்.

அதேநேரம், கடந்த நவம்பர் மாதம் வடக்கு ஷாங்க்சி மாகாணத்தில் உள்ள நிலக்கரி ஆலை ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் 26 பேர் பலியாகினர்.அதற்கு முன்பாக வடமேற்கு சீனாவில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீபரவலில் 31 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## தென்கொரிய இராணுவமுகாம்... வடகொரியா ஏவுகணைத் தாக்...

(பியாங்யாங்)

மஞ்சள் கடல் பகுதியில் தென்கொரிய இராணுவத்தை நோக்கி வடகொரியா நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக தென்கொரிய இராணுவத்தின் கூட்டுப்படைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கப்பல்கள் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலின் விபரங்கள் குறித்து தென் கொரியா மற்றும் அமெரிக்காவின் உளவுத்துறையினர் ஆய்வு செய்... வும் வடகொரி... தின் நடவ... தொடர்ந்து க... அமெரிக்கா... க்கமாக பண... வதாகவும் ... இராணுவம்... ள்ளது.

## உக்ரைனுக்கு இராணுவ உதவி... வழங்கவுள்ள கனடா அரசா...



(ஒட்டாவா)

கனேடிய அரசாங்கம், உக்ரைனுக்கு 35 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கம், இராணுவ உபகரணங்களை வ... சிகளை வழா... வழங்கப்படுவ... ளது.

பாதுகாப்பு ... பிளயர் ரஷ்யா... க்காக இவ்வ... வழங்கப்படு... வேறு தேவை... படுத்தக் கூடிய... கப்படுவதாகவு... ளார்.

தாக்குதல் ... இயக்குவதற்கு உ... களுக்கு பயிற்... எனவும்கனேடி... ச்சர் தெரிவித்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# லக நாடுகளை அச்சுறுத்தவுள்ள வைரஸ்

## லக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



**(ஜெனிவா)**

**எதிர்காலத்தில் கொரோனா வைரஸை விட இருபது மடங்கு ஆபத்தான வைரஸை உலக நாடுகள் எதிர்கொள்ள நேரிடும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

விஸர்லாந்தில் நடைபெற்ற உலக பொரு
ர மாநாட்டில் கலந்துகொண்டு கருத்
க்கும் போதே உலக சுகாதார ஸ்தா
தின் பணிப்பாளர் நாயகம் இந்த எச்ச
கயினை விடுத்துள்ளார்.

sease x என அடையாளப்படுத்தப்படும்
த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு
னத்து நாடுகளும் இணைந்து தொற்று
ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டு
வும் அவர் தெரிவித்துள்ளார்.

ாற்றுநோய் இதுவரை அடையாளம் காணப்படாததன் காரணமாக Dis ease x எனும் பெயரில் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த தொற்று நோய் கொரோனா வைரஸ் தொற்றை ஒத்த அல்லது அதைவிட ஆபத்தான தொற்று நோயாக இருக்கக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது ஒரு வைரஸ், பக்டீரியா அல்லது பூஞ்சை இனமாக இருக்கலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் ஊகிக்கின்றது. இதன்படி கொவிட் 19 எபோலா நிபா போன்ற ஆயிரக கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்திய தொற்றுநோய்கள் பட்டியலில் Disease x தொற்றுநோயும் சேர்க்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து உலக நாடுகள் இன்னும் மீளாத நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய எச்சரிக்கை மேலும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

ஆகவே உலக நாடுகள் தொற்று நோயை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தற்போதே கவனம் செலுத்துவது அவசியம் எனவும் தெரிவித்தார். (5-6)

## ம் மீது
## க்குதல்

செய்து வருவதாக
கொரிய இராணுவத்
டவடிக்கைகளை
து கண்காணிக்க
க்காவுடன் நெரு
பணியாற்றி வரு
ம் தென்கொரிய
வம் தெரிவித்து
(5-6)

## விகளை
## ாங்கம்

ள வழங்கவும் பயிற்
வழங்கவும் உதவி
படுவதாக அறிவித்துள்

ாப்பு அமைச்சர் பில்
ஷ்யாவுடனான போரு
வ்வாறு உதவிகள்
படுவதாகவும் பல்
வைகளுக்காக பயன்
கூடிய படகுகள் வழங்
ாகவும் தெரிவித்துள்

தல் விமானங்களை
ற்த உக்ரைன் விமானி
பயிற்சி வழங்கப்படும்
ஹேடியபாதுகாப்பு அமை
வித்துள்ளார். (5-6)

# விபத்திற்குள்ளான ரஷ்ய இராணுவ விமானம்

## 65 உக்ரைன் கைதிகள் உட்பட 74 பேர் பலி

(மொஸ்கோ)

உக்ரைன் போர்க் கைதிகள் 65 பேரை ஏற்றிச் சென்ற ரஷ்ய இராணுவ விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் எவரும் உயிர் பிழைக்கவில்லை என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் போரில் சிறைப் பிடிக்கப்பட்ட 65 கைதிகளை ஏற்றிச் சென்ற ரஷ்ய இராணுவத்துக்கு சொந்தமான விமானம் மேற்கு பெல்கோரோட் பிராந்தியத்தில் திடீரென விழுந்து நொறுங்கியது.

இதில், அந்த விமானம் தீப்பற்றி எரிந்ததில் 65 உக்ரைன் கைதிகள், ஆறு விமானப் பணியாளர்கள், மூன்று பாதுகாப்பு படை வீரர்கள் உட்பட 74 பேரும் உயிரிழந்துவிட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகத்தை மேற்கோள்காட்டி பிராந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த விபத்துக்கான காரணம் குறித்து உடனடியாக கண்டறியப்படவில்லை எனவும் விபத்து நடந்த பகுதியை முற்றுகையிட்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, ரஷ்ய பாராளுமன்ற கீழவையின் சபாநாயகர் வியாஸ்செஸ்லாவ் வேலோடின் கூறுகையில், "ரஷ்ய ராணுவ விமானத்தை உக்ரைன் சுட்டு வீழ்த்தியுள்ளது. தங்களது சொந்த வீரர்களையே உக்ரைன் இராணுவம் கொன்றுள்ளது. இந்த சம்பவத்தில், மனிதாபிமான பணியை மேற்கொண்ட ரஷ்ய விமானிகளும் தங்களது இன்னுயிரை இழந்துள்ளனர்" என்றார்.

இந்த ரஷ்ய இராணுவ விமான விபத்துக்கு சற்று முன்னதாக,



உக்ரைனின் வான் பாதுகாப்பு படைகளை குறிவைத்து ரஷ்யா ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதில் 18 பேர் உயிரிழந்ததாக உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்திருந்தார்.

உக்ரைன்-ரஷ்யா போர் தொடங்கி 700ஆவது நாளில் இந்த சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா- இலங்கை இடையே

## கூட்டுநடவடிக்கை குழு அமைக்க வேண்டும்

(டில்லி)

**மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்தியா-இலங்கை இடையேயான கூட்டு நடவடிக்கை குழுவை அமைக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கை கடற்படையினரால் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி இந்திய வெளிவிகார அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது கவலையளிப்பதாக அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய போக்கு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதில் மத்திய அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை கடற்படையினருக்கும் இடையே நீண்ட காலமாக நிலுவையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாகவும் உரிய தூதரக வழிமுறைகளை மேற்கொண்டு கூட்டு நடவடிக்கை குழுவை



கூட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார். (5-6)

# நிகழ்நிலை வரைபு சட்டத்தால்

## பாதிக்கப்படப்போவது தமிழ் மக்களே

(கொழும்பு)

தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும் அடக்குவதற்குமே இலங்கையில் கொண்டு வரப்படுகின்ற சட்டங்கள் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்நிலைக் காப்பு வரைபுச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


"நிகழ்நிலைக் காப்பு வரைபுச் சட்டம் மூலம் பாதிக்கப்படப் போவது தமிழ் மக்கள்தான்.

இலங்கையில் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் 30, 40 ஆண்டுகளாக தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும் அடக்குவதற்குமே பயன்படுத்தப்பட்டது.

குறித்த சட்டமூலம் ஊடாக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் ஒரு பிரச்சினைக்கு எதிராக ஒரு பாரிய கடையடைப்பு போராட்டம் அல்லது ஹர்த்தால் அறிவித்தால் அந்த அறிவித்தலை வழங்குபவர்களை இந்த சட்டமூலம் ஊடாக கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அதேபோல 15 வருடங்களாக காணாமல் போன எமது உறவுகளுக்காக தாய்மார்களும் உறவினர்களும் வீதி வீதியாக போராடி 2000 இற்கும் மேற்பட்ட நாட்கள் கடந்தும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களை நிகழ்நிலை காப்பு வரைபுசட்ட மூலத்தினூடாக கைது செய்யக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன என தெரிவித்தார். (5-6)

# இலங்கை வந்த இசைஞானி



(கொழும்பு)

பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா மற்றும் அவர் தலைமையிலான தென்னிந்திய திரையுலகின் பிரபல பாடகர்கள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் மாலை இலங்கையை வந்தடைந்தனர்.

இந்நிலையில், இளையராஜா உள்ளிட்ட குழுவினருக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதேவேளை விமான நிலையத்தில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த இசைஞானி இளையராஜா, தான் இசையமைத்த பாடலைக் கேட்காத தமிழர்கள் இலங்கையிலும் உலகிலும் இல்லை என்று தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெறவுள்ள இசை நிகழ்வொன்றில் பங்குபற்றுவதற்காகவே இளையராஜா தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# மோட்டார் குண்டுகள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பட்டிருப்பு பாலத்தின் கீழிருந்து இரண்டு சக்தி வாய்ந்த மோட்டார் குண்டுகளை மீட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வாவியின் பட்டிருப்பு பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர் ஒருவரின் வலையில் இந்த இரு குண்டுகளும் ஆற்றிலிருந்து அகப்பட்டுள்ளன. அதனை அவதானித்த குறித்த கடற்றொழிலாளர் களுவாஞ்சிகுடி பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் இரண்டு குண்டுகளையும் மீட்டுள்ளனர். இவ்விரு குண்டுகளும் 9 இஞ்சி அளவைக் கொண்ட மோட்டார் குண்டுகள் என தெரிவிக்கப்படுகின்றது. நீதிமன்ற உத்தரவைப் பெற்று குண்டு செயலிழக்கும் பிரிவினரைக் கொண்டு இக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த யுத்த காலத்தில் பட்டிருப்பு பாலத்தில் இருபகுதியிலும் இராணுவத்தினரின் பாதுகாப்பு காவலரண்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# இன்று ஒரு தகவல் 17



தென்கச்சி கோசுவாமிநாதன்

## இருட்டில் ஒரு சோதனை

இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வா! அப்படி என்று ஞானிகள் சொல்லுவார்கள். வெளிச்சத்திலே இருந்து இருட்டுக்குப் போ! அப்படி என்று சில விஞ்ஞானிகள் சொல்றாங்க. நம்மில் பல பேர் கடனை வாங்கிவிட்டு கண்ணிலே படாமல் போய்விடுவது பழக்கம்.

அதெல்லாம் கைவந்த கலையா இருக்கும். அந்தக் கலையைக் கத்துக்கிட்டதுக்கு அப்புறம் தானே கடன் வாங்கவே ஆரம்பிக்கிறாங்க. வெளிச்சத்தையே பார்க்காமல் வீட்டுக்குள்ளேயே பதுங்கியிருக்கிறதுக்கும் அவங்க தயாராக இருப்பாங்க.

அது இருக்கட்டும் ஒருத்தர் சூரிய ஒளியையோ நிலா வெளிச்சத்தையோ பார்க்காமல் பலநாள் தலைமறைவா இருக்கிறதா வைத்துக் கொள்வோம்.

அப்படி அவர் இருட்டுக்குள்ளேயே கொஞ்சநாள் இருந்தால் என்ன ஆகும்? இருந்து பார்த்தால் தான் சொல்ல முடியும்!சில பேர் அப்படி இருந்து பார்த்திருக்கிறார்கள். யார் தெரியுமா? சோவியத் விஞ்ஞானிகள். இது என்னத்திற்கு வேண்டாத வேலை என்று தோணுதா உங்களுக்கு.

ஆனால் அவர்களுக்கு அப்படி தோணவில்லை. அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? ஒரு குகைக்குள்ளே போய் கம்முன்னு உட்கார்ந்துகிட்டாங்க.

குகைன்னா சாதாரண குகை இல்லை. ஆழமான குகை. எவ்வளவு ஆழம் தெரியுமா? 13.3 கிலோ மீற்றர். அதாவது சுமாரா 8 மைலுக்கு மேலே ஆழமான குகை .

உலகத்திலேயே இது மூன்றாவது ஆழமான குகை. இந்தக் குகைக்கு உள்ளே போய்விட்டால் அவ்வளவு தான். அங்கே ஒரே இருட்டு, சூரிய வெளிச்சமும் கிடையாது, நிலா வெளிச்சமும் கிடையாது. அவ்வளவு ஆழமான இருட்டு குகைக்குள்ளே போய் இந்த விஞ்ஞானிகள் உட்கார்ந்து கொண்டார்கள். சாப்பாட்டிற்கு என்ன பண்ணினாங்க? அதைப் பற்றி ஒன்றும் கவலை இல்லை. சாப்பிடலாம். அப்பப்ப மேலேயிருந்து கீழே போய்க் கிட்டிருந்தது.

குகைக்குள்ளே தங்கியிருக்கிறதுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிணாங்க. குடுத்து வைச்சவங்க. குடும்பத் தொந்தரவே இல்லை. அவங்க அப்படி எத்தனை நாள் அந்தக் குகைக்குள்ளே இருந்தார்கள் தெரியுமா? ஒருநாள், இரண்டு நாட்கள் இல்லை. 71 நாட்கள் இருட்டிலேயே இருந்தாங்க. அதாவது கிட்டத்தட்ட 2 1/2 மாதம் உள்ளேயே இருந்திருக்காங்க.

இவ்வளவு நாள் சூரிய வெளிச்சத்தையோ நிலா வெளிச்சத்தையோ பார்க்காமல் இருந்தா என்ன ஆகிறது. அதைத் தெரிந்து கொள்ளத்தானே இந்த ஆராய்ச்சியே நடந்தது. அப்படி என்ன தெரிந்து கொண்டார்கள் தெரியுமா? அந்தக் குகைக்குள்ளே போய் இருந்த விஞ்ஞானிகளை மெதுவாக வெளியிலே கொண்டுவந்து உட்கார வைத்து விட்டு விசாரித்தார்கள். இருட்டிலே இருந்தவர்கள் இப்ப அவர்களோட அனுபவத்தைச் சொல்ல ஆரம்பித்தார்கள். என்ன சொன்னாங்க தெரியுமா?

அங்கே பேயைப் பார்த்தேன். பிசாசைப் பார்த்தேன் என்றா சொன்னாங்க? விஞ்ஞானிகள் அப்படி சொல்லுவாங்களா. இவங்க என்ன சொன்னாங்க என்றால் அவர்களுக்கு ராத்திரி பகல் என்ற உணர்வே இல்லாமல் போய்விட்டதாம். அந்த வித்தியாசமே இல்லாமல் போய்விட்டது.

அப்படிப் போனதனாலேயே அவங்களால ஓய்வு எதுவும் இல்லாமல் 48 மணி நேரமும் தொடர்ந்து வேலை செய்ய முடியுதாம். அதேசமயத்தில தொடர்ச்சியாக 15 மணிநேரம் தூங்கவும் முடியுதாம். 24 மணிநேரம் கொண்டது ஒருநாள். அப்படி என்கிறதே அர்த்தமில்லாமல் போய்விட்டது அப்படின்னு சொல்லுறாங்க. அதனாலேயே சில ஆபீசை குகைக்குள்ளே கொண்டு போய் கட்டினால் சௌகரியமா இருக்கும் போல இருக்கே. ஏனென்றால் அங்கே ஓய்வே இல்லாமல் 48 மணி நேரம் தொடர்நது வேலை செய்ய முடியுதாமே. உடம்பைப் பொறுத்த வரைக்கும் வெளிச்சத்திலே இருந்து இருட்டுக்குப் போனா நல்லதா தெரியுது.

ஆனால் அறிவைப் பொறுத்த வரைக்கும் இருட்டிலே இருந்து வெளிச்சத்திற்கு வரணும். அது தான் நல்லது. ஒரு மகான் சொல்கிறார். உங்களுக்குப் பின்னால் நீங்கள் வாழ்ந்து மறைந்ததற்கு அறிகுறியாக எதையாவது விட்டுச் செல்லுங்கள். அப்படி இல்லாவிட்டால் மரம், கல் முதலியவற்றுக்கும் உங்களு க்கும் என்ன வேறுபாடு இருக்கிறது. அப்படி என்று கேட்கிறார் அவர். நாமே இங்கே இருந்ததுக்கு அடையாளமாக எதையாவது விட்டுவிட்டுப் போக வேண்டும். அது தான் நல்லது.

இப்பவும் அது மாதிரி விட்டுப் போறவர்கள் நிறை பேர் உண்டு. எங்கே தெரியுமா? தொடர்ந்து வேலை செய்ய முடியுதாமே. பீச்சுக்குப் போனால் அதைப் பார்க்கலாம். சுண்டல் வாங்கி தின்றுவிட்டு வெற்றுப் பேப்பரை விட்டுவிட்டுப் போகிறவர்கள் எத்தனை பேர்? இருந்ததுக்கு அடையாளமாக எதையாவது விட்டுப் போங்க என்று சொன்னா அதுக்காக இப்படியா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர் காவுவண்டி இன்மையால் மக்கள் சிரமம்

(அக்கராயன்)

பூநகரியில் 1990 அம்புலன்ஸ், சேவையில் இல்லாததன் காரணமாக பூநகரி பிரதேச மக்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு 8 ஆம் மாதம் பழுதடைந்த நிலையில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் அம்புலன்ஸ் தரித்து நிற்கிறது. தற்போது முழங்காவிலில் பொலிஸ் நிலையத்தில் இருந்தே 1990 அம்புலன்ஸ் பூநகரி பிரதேசத்திற்கான பணியில் ஈடுபடுகின்றது.

கடந்த திங்கட்கிழமை முக்கொம்பனில் குளவி தாக்குதலுக்கு உள்ளான மூவரையும் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு பூநகரி 10 ஆம் கட்டை வரை முழங்காவிலில் இருந்தே அம்புலன்ஸ் வந்து கொண்டு சென்றதற்கு நீண்டநேரம் எடுத்தது.

இந்நிலையில் பூநகரியில் பழுதடைந்த நிலையில் காணப்படும் அம்புலன்ஸினை உடனடியாக திருத்தம் செய்து நோயாளர்களின் உயிர்களை காப்பதற்கான நடவடிக்கையினை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-6-350)

# வன்னேரிக்குளத்தில் அதிகரிக்கும் திருட்டுக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக களவாக தேங்காய் பிடுங்குதல், வீடுகளில் அரிந்து அடுக்கப்பட்டிருக்கும் அரிகலினை களவாக கொண்டு செல்லுதல், வாழைத் தோட்டங்களில் களவாக வாழைக்குழை வெட்டுதல் உட்பட கோழித் திருட்டு என திருடர்கள் கைவரிசை காட்டி வருகின்றனர்.

500 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் சட்டவிரோத மது உற்பத்தி அதிகரித்து காணப்படுகின்றது.

இதன் பின்னணியிலே திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் அக்கராயன் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்து குறித்த திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (5-6-350)

# மக்களை அலைக்கழிக்கும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

சேவைகளைப் பெற வரும் மக்களை அலைக்கழிக்காமல் அவர்களுக்குத் தேவையான சேவைகளை உடனடியாக வழங்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்களில் காலதாமதம் ஏற்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் வலியுறுத்தினார்

இவ்விடயம் தொடர்பில் தாம் தீவிர அவதானம் செலுத்தியுள்ளதாகவும் மக்களை இவ்வாறு அலைய வைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (5-6)

## இலங்கையில் விவசாய செய்கைக்கு புதிய மாதுளை வகைகள் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் விவசாய செய்கைக்கு ஏற்ற இரண்டு புதிய மாதுளை வகைகளை விவசாய திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. விவசாய திணைக்களத்தின் ஹோமாகம தாவர வைரஸ் அடையாள நிலையம் முன்னெடுத்த ஆய்வுகளின் அடிப்படையில் குறித்த இரண்டு புதிய வகை மாதுளைகளும் நேற்றுமுன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மாலிபிங், லங்கா ரெட் என பெயரிடப்பட்டுள்ள இந்த இரண்டு புதிய மாதுளை வகைகளையும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சிவப்பு நிற மாதுளைகளுக்கு மாற்றீடாக பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், மாதுளைகளுக்கான இறக்குமதி செலவினத்தை கட்டுப்படுத்த முடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (5-6)



தென்மராட்சி-கைதடி சிறுவர் பூங்காவில் ஓராண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது.

(படம்: சுபேசன்)



யாழ்.இந்திய துணைத் தூதரக வளாகத்தில் விஸ்வ ஹிந்தி திவாஸ் 2024 இன் கொண்டாட்டங்கள் அண்மையில் இடம்பெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 650 | 600 | 700 | 700 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 1400 | 1000 | 1000 | 1000 | 950 |
| தக்காளி | 600 | 650 | 600 | 800 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 150 | 150 | 100 |
| கோவா | 700 | 450 | 600 | 800 | 700 |
| கரட் | 1400 | 800 | 1000 | 2000 | 1800 |
| பூசணி | 180 | 140 | 150 | 200 | 120 |
| புடோல் | 300 | 250 | 300 | 300 | 230 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 360 | 450 | 450 | 350 |
| பெரிய வெங்காயம் | 400 | 380 | 400 | 450 | 370 |
| பாகற்காய் | 800 | 600 | 800 | 1000 | 700 |
| வெண்டக்காய் | 450 | 600 | 350 | 600 | 520 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 | 70 |
| பயற்றங்காய் | 800 | 750 | 800 | 800 | 1000 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 | 800 | 700 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 800 | 800 |
| கறிமிளகாய் | 650 | 650 | 800 | 1000 | 600 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | 3000 | 2000 |
| போஞ்சி | 700 | 500 | 600 | 800 | 650 |
| கத்தரிதம்புள்ள | 750 | 500 | 700 | 600 | --- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 120 | 150 | 120 |
| தேசிக்காய் | 200 | 300 | 350 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 450 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 450 | 200 | 500 | 600 | 300 |
| முள்ளங்கி | 200 | 100 | 300 | 400 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 140 | 60 | 140 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 100 |

# துப்பாக்கி ரவைகளுடன் முல்லையில் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு உடுப்புக் குளம் பகுதியில் உள்ள தனியார் வீட்டு காணி ஒன்றில் இருந்து நேற்று T-56 துப்பாக்கிக்கான 100 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுப்புக் குளம் பகுதியில் உள்ள தனியார் வீட்டு காணியில் துப்பாக்கி ரவைகள் காணப்படுவதாக நேற்று முன்தினம் மாலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்திற்கு சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த சோதனையின் போது சந்தேகநபரின் வீட் டுக் காணியிலிருந்து T-56 துப்பாக்கிக்கான 100 ரவை கள் மீட்கப்பட்டுள்ளதுடன் 33 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரும் கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-6-290)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 388





காலை நேரத்தில் இரு புறமும் மரங்களடர்ந்த அந்த இராஜபாட்டையில் பிரயாணம் செய்வதே ஓர் ஆனந்த அனுபவம். பழையாறை அரசிளங்குமாரி தன்னிடம் ஒப்புவித்திருந்த வேலையைச் செய்து முடித்துவிட்டோம் என்ற பெருமித உணர்ச்சி அவன் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது.

அது மட்டுமா? பல வருஷங்களாக அவன் இதயத்தில் பொங்கிக் கொண்டிருந்த ஆசையும் நிறைவேறிவிட்டது. சோழவள நாட்டின் செல்லப்பிள்ளையைப் பார்த்தாகிவிட்டது. நாடு நகரமெல்லாம் மக்கள் எந்த வீர இளைஞரின் வீரப் பிரதாபங்களையும் குணாதிசயங்களையும் பாடிப் புகழ்ந்து கொண்டிருந்தார்களோ அந்த அரசிளங்குமாரரைச் சந்தித்தாகிவிட்டது.

அந்தச் சந்திப்பு தான் எவ்வளவு அதிசயமான சந்திப்பு? அருள்மொழிவர்மர் ஒரு விசித்திரமான மனிதர் என்று தான் கேள்விப்பட்டிருந்தது உண்மைதான். திடீரென்று குதிரையைத் திருப்பித் தன்னைத் தாக்கி திக்குமுக்காடச் செய்துவிட்டாரே? அவர் சேனைக்குத் தலைமை வகித்துச் செல்லுமிடங்களிலெல்லாம் வெற்றிமேல் வெற்றியாக இருந்து வருவதின் இரகசியமும் இது தான் போலும்! பகைவர்கள் எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத இடத்தில் தாக்குவதே இவருடைய போர்முறை போலும். ஆனால் இவரது இடைவிடா வெற்றியின் இரகசியம் இது மட்டுந்தானா? சேனா வீரர்களுடன் எவ்வளவு பவ்யமாக இவர் பழகுகிறார்? எப்படி அவர்களைத் தம் அன்புக்கு வசப்படுத்தி வைத்திருக்கிறார்!

போர் வீரர்களை மட்டுந்தானா? தாம் வெற்றிகொண்ட நாட்டின் மக்களையும் எப்படி வசீகரப்படுத்தி வைத்திருக்கிறார்? சமீபத்தில் மாபெரும் போர் நடந்த நாடு என்று இதைச் சொல்ல முடியுமா? சாலைகளில் மக்கள் எவ்வளவு உல்லாசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்! இரு பக்கங்களிலுமுள்ள கிராமங்களில் ஜனங்கள் எப்படி நிர்ப்பயமாகவும் கவலையின்றியும் தத்தம் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்? மக்களின் முகங்களில் பீதியின் அறிகுறியோ துயரத்தின் சின்னமோ சிறிதும் காணப்படவில்லையே? கலகலவென்று பெண்களும் குழந்தைகளும் சிரிக்கும் சப்தம் கூட அடிக்கடி காதில் விழுகிறதே! இது என்ன விந்தை! இவர் எத்தகைய விந்தையான மனிதர்! வெற்றி கொண்ட நாட்டு மக்களிடமிருந்து உணவுப் பொருளைக் கைப்பற்றக் கூடாது என்று இளவரசர் பிடிவாதம் பிடித்துச் சோழ நாட்டிலிருந்து சைன்யத்துக்கு உணவுப்பொருள் வர வேண்டுமென்று வற்புறுத்தியதும் அதன் காரணமாகப் பழுவேட்டரையர்களுக்கு ஏற்பட்ட கோபமும் அவர்கள் சுந்தர சோழரிடம் புகார் கூறியதும் இவையெல்லாம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தன.

அன்றியும் ஆதித்த கரிகாலர் கையாளும் கொடூரமான போர் முறையையும் அருள்மொழிவர்மரின் தயாளம் பொருந்திய தர்ம யுத்த முறையையும் அவன் தன் மனத்திற்குள்ளே ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான்.

சில நாளைக்கு முன்பு வரையில் தன்னுடைய எஜமானராயிருந்த ஆதித்த கரிகாலரைப் பற்றி எவ்விதத்திலும் குறைவாக எண்ணுவது அவனுக்கே பிடிக்கவில்லை.

ஆயினும் அந்த அநுராதபுரத்து இராஜபாட்டையில் இருபுறமும் வசித்த கிராம ஜனங்களின் மலர்ந்த முகங்களைப் பார்க்கும் போதெல்லாம் அவனால் மேற்கண்டவாறு ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அம்மம்மா! ஆதித்த கரிகாலர் யுத்தம் செய்து திரும்பிய நாடுகளில் இத்தகைய காட்சிகளைக் காணமுடியுமா? எங்கெங்கும் ஒரே ஓலக்குரல் அல்லவா கேட்டுக் கொண்டிருக்கும்?

இத்தகைய அபூர்வ குணாதிசயம் படைத்த இளவரசருடன் எத்தனையோ விஷயங்களைப் பற்றி பேச வேண்டும். எவ்வளவோ காரியங்களைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று வந்தியத்தேவனுடைய உள்ளம் துடிதுடித்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## செயற்கரிய சாதனை

ஒருநாள் முல்லா ஒரு காட்டு வழியாக வெளியூருக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு முரடனிடம் அவர் சிக்கிக் கொண்டு விட்டார்.

அந்த முரடனுக்கு முல்லாவைப் பற்றியும் அவருக்கு இருக்கும் புகழைப் பற்றியும் நன்றாகத் தெரியும்.

அவரை அவமானப் படுத்த எண்ணிய முரடன் தன் கைவாளை உருவிக் கொண்டு "முல்லா அவர்களே உம்மைப் பெரிய மேதாவி என்றும் எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும் உம்முடைய அறிவினாலேயே தப்பிப் பிழைப்பீர் என்றும் பேசிக் கொள்கிறார்களே அது உண்மைதானா?" என்று கேட்டான்.



"மக்களுக்குப் பொய் பேசத் தெரியாது. அவர்கள் உண்மையைத்தான் பேசுகிறார்கள்" என்றார் முல்லா.

"அப்படியானால் உமது அறிவுச்சாதுரியத்தை நிரூபித்துக் காண்பியும் பார்க்கலாம். இதோ இந்த உடைவாளால் உமது தலையை வெட்டப் போகிறேன். உம்மால் தப்பிப் பிழைக்க முடியுமா?" என்று முரடன் கேட்டான்.

"உம்முடைய கைவாளுக்குத் தப்பிப் பிழைக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்று கூறிய முல்லா திடீரென வானத்தைப் பார்த்து விட்டு மகிழ்ச்சியுடன் சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீர்" என்று முரடன் கேட்டான். "அன்பரே, உமது கைவாள் எனது தலையைத் துண்டிக்கும் முன்பு அதோ வானத்திலே கண்களைப் பறிக்கும் அழகுடன் சிறகுகளை அசைத்துப் பறக்கும் அந்த விநோதமான தங்கப் பறவையை ஆசை தீரப் பார்த்து விடுகிறேன். அதற்குப் பிறகு நீ எனது தலையை வெட்டி விடலாம்." என்றார் முல்லா.

"தங்கப் பறவையா வானத்தில் பறக்கிறது?" என்ற முரடன் வியப்புடன் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான்.

முல்லா குபீரெனப் பாய்ந்து முரடன் கையிலிருந்த வாளைத் தட்டிப் பறித்து விட்டார்.

"நண்பனே, உம்முடைய உயிர் என் கையில் இருக்கிறது. நான் நினைத்தால் உமது தலையை வெட்டி வீழ்த்தி விட முடியும்" என்றார் முல்லா.

"முல்லா அவர்களே நீர் வெற்றி பெற்று விட்டீர். என்னை மன்னிக்க வேண்டும்" என்று முரடன் தாழ்ந்து அவரை வணங்கினான்.

"அன்பனே, கடவுள் சித்தமில்லாமல் எந்த உயிரையும் யாரும் அழித்து விட முடியாது என்பதை உணர்ந்து கொள்ளும்" என்று கூறி வாளை முரடனிடம் கொடுத்து விட்டு முல்லா தன்வழி நடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களுக்கு செயல்களால் உபதேசியுங்கள், வார்த்தைகளால் அல்ல.

– இமாம் ஹஸ் பஸரி(ரவ்)

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## பாராட்டத் தவறாதீர்கள் நன்றியை மறவாதீர்கள்

யாரை எப்படி எந்த இடத்தில் பாராட்ட வேண்டும் என்பதை நம் தமிழ்ப் புலவர்கள் பட்டியல்படுத்தித் தந்துள்ளனர்.

அதில் ஒரு தந்தை தன் பிள்ளையை நெஞ்சத்தால் பாராட்ட வேண்டும். அதாவது வார்த்தைகளால் வெளிப்படுத்தாமல், தன் நெஞ்சத்தால் பாராட்டும்போதுதான், பிள்ளைகளை நன்மக்களாக வளர்க்க முடியும்.

இதேபோன்று வினையாளை வேலை முடிந்த கையோடு பாராட்ட வேண்டும். அந்தப் பாராட்டு வேலை செய்பவர்களை உற்சாகப்படுத்துவதோடு அவர்களை மனச் சோர்வில் இருந்து மீட்டெடுக்கும்.

கடந்த 22ஆம் திகதி அயோத்தி இராமர் கோவில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

கும்பாபிஷேகம் நிறைவுற்ற கையோடு, அயோத்தி இராமர் கோயில் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட அத்தனை பணியாளர்களையும் ஒரு பெரும் அரங்கில் இருத்தி, அவர்களைப் பாராட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் இடம்பெற்ற சிறப்பு என்னவெனில், பிரதமர் மோடி அவர்கள் ரோஜாப் பூக்களை அந்தத் தொழிலாளர்கள் மீது தூவி அவர்களை பாராட்டியமையாகும்.

ஆம், உலகம் முழுவதும் வியந்து பார்க்கின்ற அயோத்தி இராமர் கோவிலின் வனப்பைக் கண்டு நாம் வியந்து நிற்கின்றோம்.

ஆனால் அந்தக் கட்டுமானத்தை அமைப்பதில் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பான பணியை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

இங்குதான் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களைப் பூச்சொரிந்து பாராட்டி வாழ்த்தினார்.

இந்நிகழ்வைப் பார்த்தபோது நெஞ்சம் நெகிழ்ந்து போனது.

உண்மை. வேலையாட்களை அவர்களின் வேலை முடிவில் பாராட்ட வேண்டும்.

எனினும் இந்த உன்னதமான பண்பாட்டில் ஈழத் தமிழர்களாகிய நாம் மிகவும் பின்தங்கி நிற்கின்றோம் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

பொதுவில் எங்களிடம் பாராட்டுகின்ற பண்பாடும் நன்றியை மறக்காத பெருந்தன்மையும் மிகக் குறைவு என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளும்போதுதான் அந்தப் பலயீனத்தில் இருந்து மீளமுடியும்.

அதிலும் குறிப்பாக தமிழர் பிரதேசத்தில் இருக்கக்கூடிய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களில் தங்கள் பணியாளர்களைப் பாராட்டுகின்ற பண்பாடு அறவே இல்லை எனலாம்.

இதை இன்னொருபடி மேற்சென்று கூறுவதாக இருந்தால், பணியாளர்களின் அர்ப்பணிப்பான வேலையை, கடமைப் பொறுப்பை, அவர்களின் விசுவாசத்தை எங்கள் தமிழ் அரச அதிகாரிகள் கண்டுகொள்வதேயில்லை எனலாம்.

பாராட்டுவது தம் பதவி நிலைக்கு உகந்ததல்ல என்ற எண்ணமோ அல்லது பாராட்டுவது சம்பந்தப்பட்டவரை ஆணவச் செருக்குக் உட்படுத்தும் என்ற கற்பனை நோயோ தெரியவில்லை. நம் மத்தியில் இருக்கக்கூடிய அரச அதிகாரிகளில் பெரும்பாலானவர்களிடம் பாராட்டும் மனநிலை அறவே இல்லை.

இதேபோன்று ஒருவர் செய்த பணியை நன்றியோடு நினைக்கின்ற மனநிலையும் நம் மத்தியில் இல்லாமல் போய்விட்டது.

இதன் காரணமாக நம் மத்தியில் சுயநலமும் வளர்ந்து, ஏனோதானோ என்ற மனப்பாங்கும் கடமைப் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கின்ற எண்ணமும் உயர்ந்து நிற்கிறது.

ஆகையால் இனியேனும் பாராட்டுவதைத் தவறாமல் செய்வோம். நன்றியை மறவாமல் இருப்போம். இதைச் செய்வது மிக உயர்ந்த அறமாகும்.

## இணையவழி பாதுகாப்பு சட்டமூலம்
## நாட்டில் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும்
## ஹர்ஷ டி சில்வா எம்.பி

(கொழும்பு)

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் நாட்டில் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவையிருப்பினும் இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் பொருளாதார விளைவுகளை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என ஹர்ஷ டி சில்வா கோரியுள்ளார்.

இ-கொமர்ஸில் யோசனை ஏற்படுத்தும் விளைவுகளை ஒருவர் கவனிக்க வேண்டும்.

அத்துடன் நமது இளைஞர்களை இ-கொமர்ஸ் மூலம் பொருளாதாரத்தில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்.

எனினும் இணையவழி பாதுகாப்பு சட்டங்கள் அதற்கான வாய்ப்புகளை தடுக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொருவர் சமூக ஊடகங்களில் தேவையற்ற இடுகையைப் பதிவேற்றுவதால், பேஸ்புக் மற்றும் யூ டியூப் போன்ற சேவை வழங்குநர்களை குற்றவாளிகளாக அரசாங்கம் கருத முடியாது என்றும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (ம-7)

## மாவீரர்களுக்கு நினைவேந்தல்
## கைதானவருக்கு தொடர்ந்து மறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால், மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் உட்பட்ட இருவரையும் எதிர்வரும் பெப்பிரவரி 7 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு மட்டு. நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் நவம்பர் 27 ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்) அவரது மகன் ஆகியோர் வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் மாவீரர்களுக்கான விளக்கேற்றி அஞ்சலி செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைக்காக நீதிமன்ற அனுமதியை கோரி விசாரணை செய்யப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த வழக்கு விசாரணைக்காக நேற்று முன்தினம் நீதவான் நீதிமன்றில் எடுக்கப்பட்ட போது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-7)

## ஔவையார் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

(வவுனியா)

வவுனியா சின்னப் புதுக்குளம், வெளிக்குளம் சந்தியிலுள்ள ஔவையார் நினைவுத் தூபியில் அவரது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நகரசபை செயலாளர் தயாபரன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது ஔவையாரின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுப் பேருரையினை இந்து கலாசார உத்தியோகத்தர் சிவகஜன் நிகழ்த்தியிருந்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் நகரசபை உறுப்பினர்கள், முன்னாள் செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளர், தமிழ் விருட்சம் அமைப்பினர், நகரசபை உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,250)

## 6 கிலோ கஞ்சாவுடன் புத்தளத்தில் ஒருவர் கைது

புத்தளம் - ஆனமடுவ பகுதியில் உள்ள பிரபல குத்தகை நிறுவனம் ஒன்றில் பணியாற்றிவரும், கடன் வழங்கல் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் ஒருதொகை கஞ்சாவுடன் நுரைச்சோலை, இளந்தையடி பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், காரில் கேரள கஞ்சாவை ஏற்றிச் சென்ற போது பொலிஸாரால் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரபல குத்தகை நிறுவனமொன்றின் ஆனமடுவ கிளையில் கடன் வழங்கும் அதிகாரியாக கடமையாற்றி வந்த 40 வயதான ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் காரின் சாரதி ஆசனத்திலும் மற்றைய முன் இருக்கைகளிலும் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவை கொண்டு சென்றுள்ளார் என தெரிய வந்துள்ளது. இதன் பெறுமதி ஏறக்குறைய 20 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## புத்தளத்தில் விபத்து தந்தையும் மகனும் பலி

புத்தளம் ஆனமடுவ - நவகத்தேகம பிரதான வீதி லபுகம பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தை மற்றும் மகன் உயிரிழந்துள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் காயமடைந்த தாய் ஆபத்தான நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நவகத்தேகம, வெலேவெவ பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய இராணுவ விஷேட படையின் லெப்டினனட் பதவி வகித்த ஜீவக செனவிரத்ன மற்றும் அவரது 10 வயதான [illegible] ஆகிய இருவருமே இந்த விபத்தில் உயிரந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இராணுவ வீரர், மகன் மற்றும் மனைவி ஆகியோர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஆனமடுவ - நவகத்தேகம பிர்தான வீதியின் ரஜமஹா விகாரைக்கு முன்பாக லொறியுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் ஆனமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பழம் பறிப்பதற்காக
## மரத்தில் ஏறியவர் கீழே விழுந்து மரணம்

பெல்மடுல்ல சிங்கபுர பிரதேசத்தில் பழம் பறிப்பதற்காக மரத்தில் ஏறிய நபர் மரக்கிளையுடன் கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெல்மடுல்ல சிங்கபுர பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 66 வயதுடையு நபரே உயிரிழந்துள்ளார்.

மரத்தில் இருந்து கீழே விழுந்தவரை அயலவர்கள் கஹவத்தை போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

08

### சங்கிலிகுமாரனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளும்

எதிர்மன்ன சிங்கன் போன்று போர்த்துக்கேயரது அனுசரணையுடன் ஆட்சிப் பொறுப்பை பெற்றுக் கொண்ட சங்கிலிகுமாரன் காலப் போக்கில் போர்த்துக்கேயருக்கு எதிராகவே செயற்பட்டு வந்தான். இவன் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படும் வகையில் கண்டி அரசு, நாயக்க அரசு, கள்ளிக்கோட்டை அரசு, ஆகியவற்றுடன் தொடர்புகளை பேணி அவர்களிடம் படை உதவி பெற்று பல தாக்குதல்களை மேற்கொண்டு வந்தான்.

அவ்வகையில் 1619 ஆம் ஆண்டு சங்கிலி மன்னனின் கூட்டுப்படை மன்னாரில் தாக்குதலை மேற் கொண்டிருந்த சமயமே சங்கிலியை கைது செய்யும் நோக்குடன் பிலிப்டீ ஒலிவேறா தலைமையில் படையெடுப்பொன்றை போர்த்துக்கேயர் ஆரம்பித்திருந்தனர். இப்படையெடுப்பில் சங்கிலியின் படைகள் தோல்வியை சந்தித்து வந்தன. படையின் நிலையை அறிந்து கொண்ட சங்கிலிகுமாரன் போர்த்துக்கேயரிடம் அகப்படாது தப்பிக்கும் நோக்குடன் அரச செல்வங்கள் மற்றும் தனது குடும்பத்தினருடன் கடல் வழியாக புறப்பட்டான். ஆனால் கடலில் வைத்து போர்த்துக்கேயரால் கைது செய்யப்பட்டு கோவாவிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தூக்கிலிடப்பட்டான்.

தூக்கிலிடும் சந்தர்ப்பம் வரை அவனை கத்தோலிக்க மதத்தை தழுவும்படி துன்புறுத்தப்பட்டான். எனினும் அவனது அந்நியருக்கு எதிரான கொள்கையின் விடாப்பிடியால் மதம் மாறாது மரணத்தை தழுவினான். இவனது கைதுடன் யாழ்ப்பாணத்து தமிழ் அரசும் அஸ்தமனமானது குறிப்பிடத்தக்கது.

### அரசு வீழ்ச்சியடைந்த பின்னர் போர்த்துக்கேயருக்கு எதிரான சுதேசிகளது நடவடிக்கைகள்

1619 ஆம் ஆண்டு சங்கிலிகுமாரனை கைது செய்ததுடன் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திய போர்த்துக்கேயர் தமது நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுக்கத் தொடங்கினர். இதனால் சுதேசிகள் பலர் துன்பத்தை அனுபவித்து வந்தனர்.

குறிப்பாக யாழ்ப்பாண அரசு மீதான படையெடுப்பிற்கு தலைமை தாங்கி வந்த பிலிப்டீ ஒலிவேறா கடுமை போக்கை கடைப்பிடித்து தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தான். இதனால் சுதேசிகள் பலர் இவன் மீதும் இவனது படை மீதும் பெருவெறுப்பை கொண்டிருந்தனர்.

இவ்வேளையில பிலிப்டீ ஒலிவேறாவின் மரணம் 1627 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இது இராச்சியத்தில் இருந்த மக்களுக்கு பெரும் நிம்மதியை வழங்குவதாக இருந்ததுடன் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படுவதற்கான ஊக்கத்தை வழங்கியது. இவ்வேளையில் யாழ்ப்பாண அரசு மீது மணவினை உறவு மூலம் உரிமை உண்டு எனக் கூறி கண்டி மன்னன் செனரத் 1628 ஆம் ஆண்டு முதலாவது படையெடுப்பை மேற்கொண்டு வந்து போர்த்துக்கேயருடன் போரிட்டான். இதனை சாதகமாக பயன்படுத்திய தமிழ் மக்கள் அவர்களுடன் இணைந்து போரிட்டனர். இதன்போது இரு கத்தோலிக்க மதகுருமாரும் 30 இற்கும் அதிகமான தேவாலயங்களும் அழிக்கப்பட்டன.

இது சுதேசிகளிடம் காணப்பட்ட எதிர்ப்புணர்வின் வெளிப்பாட்டையே பிரதிபலிப்பதாக உள்ளது. கடுமையாக போராடிய சுதேச படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி 13 நாட்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். எனினும் போர்த்துக்கேயர் இப்படைகளை சிதறடித்து மீண்டும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிக் கொண்டனர்.

அதன் பின்செனரத் 1629 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் நோக்குடன் படையெடுப்பை மேற்கொண்ட போதும் அப்படையெடுப்பு போர்த்துக்கேயரால் முறியடிக்கப்பட்டது. இப்படையெடுப்பே யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதிப் படையெடுப்பாகவும் அமைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் சுதேசிகளது போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கையானது மௌனிக்கப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது. அதே வேளை போர்த்துக்கேயரும் தமது நடவடிக்கைகளை ஒல்லாந்தர் 1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் வரை எதுவித தடைகளுமின்றி முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (நன்றி-க. ஜெயதீஸ்வரன் அவர்கள் எழுதிய "இலங்கையில் போர்த்துக்கேயரது மேலாதிக்கமும் சுதேசிகளது எதிர் நடவடிக்கைகளும்- யாழ்ப்பாண இராச்சியத்தை சிறப்பாகக் கொண்ட ஓர் ஆய்வு" கட்டுரையிலிருந்து)

அரச உரிமை தொடர்பான மோதல்களில் மக்கள் [illegible] டிருந்தமையும் [illegible] மானதுமான படைப்பலம் யாழ்ப்பாண ஆட்சியாளர்களிடம் இல்லாதிருந்தமையும் கண்டி இராச்சியத்தைப் போன்று இயற்கை அரண்கள் இல்லாதிருந்தமையும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணங்களாயின.

### யாழ்ப்பாணக் கோட்டை பற்றி...

இலங்கையை ஆக்கிரமித்து அதன் கரையோரப்பகுதிகளை தமது ஆளுகையின் கீழ் கொண்டுவந்த போர்த்துக்கேயர் வடபகுதியில் தமது ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்ளும் நோக்கில் 1619ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையினை நிறுவினர்.

வீரம் மிக்க தமிழ் மன்னர்களால் அடுத்தடுத்து ஆளப்பட்டு வந்த நல்லூரை இராசதானியாக கொண்டு இயங்கிவந்த யாழ்ப்பாண இராச்சியம் 1619 இல் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

இதனையடுத்து யாழ்ப்பாண இராச் சியத்தின் தலைநகரத்தை நல்லூரிலிருந்து அவர்கள் கடற்கரையோரத்தை அண்டியதாக யாழ்ப்பாணத்துக்கு மாற்றினர். அங்கே, நகரம் ஒன்றை உருவாக்கிய அவர்கள் யாழ்ப்பாணக் குடாக்கடலை அண்டி ஒரு கோட்டையையும் கட்டினார்கள்.

1619 ஒகஸ்ட் மாதத்தில் பாதுகாப்புக்காக யாழ்ப்பாணத்தில் கோட்டையொன்றைக் கட்டிக்கொள்வதற்கு போர்த்துக்கேயரின் தெற்காசிய பிராந்தியத்துக்கான தலைமையகமான கோவாவிலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கேய அதிகாரியான பிலிப்பே டி ஒலிவேராவுக்கு அனுமதி கிடைத்திருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

எனினும் பாதுகாப்பு, ஆளுகை என்பவற்றுக்கு பொருத்தமான இடமொன்றைத் தெரிவு செய்து கோட்டையின் நிர்மாண வேலைகள் 1625 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமானது என்றும் 1629இல் இது பாவனையில் இருந்தது என்றும் கூறப்படுகிறது. ஆனால், 1637இல் கூட இதன் நிர்மாணப்பணிகள் முழுமை பெறவில்லை என்றே ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருப்பினும் கிடைக்கப் பெற்ற ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது, போர்த்துக்கேயர் காலத்தில் இருந்த யாழ்ப்பாணக் கோட்டை, சதுர வடிவமானது. நான்கு மூலைகளிலும் அமைந்த காவலரண்களுடன் ஒவ்வொரு பக்கச் சுவர்களின் மத்தியிலும் அரைவட்ட வடிவிலமைந்த அரண்களும் இருந்தன.

கோட்டைக்குள்ளே கத்தோலிக்கத் தேவாலயமொன்றும் கப்டன் மேஜரின் வாசஸ்தலமும் வைத்தியசாலையொன்றும் மேலும் சில முக்கியமான அலுவலக கட்டடங்களும் இருந்தன என்று கூறப்படுகிறது. ஆனால், இக்காலத்தில் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண நகரம் கோட்டைக்கு வெளியிலேயே இருந்தது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், போர்த்துக்கேயரின் பின்னர் இலங்கை மீது படையெடுத்த ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தை 1658 ஜூன் 22இல் கைப்பற்றினர். மறுநாள் ஜூன் 23, 1658 இல் யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தர் வசமானது. வடஇலங்கையின் பாதுகாப்புக்கும் யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட வடபகுதி மீதான ஆளுகைக்கும் யாழ். கோட்டையின் அவசியத்தை புரிந்து கொண்ட ஒல்லாந்தர்கள் அதனை தமது பாதுகாப்புக்குரிய மையமாக்கினர்.

ஆனாலும், போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட யாழ்.கோட்டையின் அமைப்பை மாற்ற எண்ணிய ஒல்லாந்தர்கள், நாற்சதுர அமைப்பில் யாழ். கோட்டையை இடித்துவிட்டு ஐங்கோண வடிவிலமைந்த புதிய கோட்டையைக் கட்டினார்கள். பின்னர், ஒல்லாந்தர்களின் அரச நிர்வாக, பாதுகாப்பு செயற்பாடுகள் அனைத்தும் யாழ். கோட்டையிலேயே ஒருங்கிணைக்கப்பட்டன.

பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் 1795 ஆம் ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடையும் வரை இக் கோட்டையை தமது வசம் வைத்திருந்தனர்.

### நல்லூர்க் கந்தன் ஆலயம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தோற்றம் பற்றிச் சரியான தெளிவு இல்லையெனினும் யாழ்ப்பாண அரசு காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோயிலாக இருந்தது என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சரான புவனேகவாகு என்பவனால் இக்கோயில் கி.பி 1248 ஆம் ஆண்டளவில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

பட்டுக் கொண்டிருக்கின்றார்.

தேர்தல் தொடர்பான நகர்வுகள் இரண்டாம் பட்சமானவைதான்.

ஆனால், எதிர்வரும் ஒக்ரோபர் அல்லது நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## இராஜாங்க...

விபத்தில் காயமடைந்த வாகன சாரதி ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த சனத் நிஷாந்தவின் ஜீப், அதே திசையில் பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் வாகனத்துடன் மோதி, பின்னர் வீதி பாதுகாப்பு வேலியிலும் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான இராஜாங்க அமைச்சர், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வாகன சாரதி ஆகியோர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து இராஜாங்க அமைச்சரும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் உயிரிழந்துள்ளனர். கொள்கலன் வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## யாழ்.நகர்ப்...

பெற்ற சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

தனது தந்தையுடன் இளைஞன் ஒருவர் பயணித்துக்கொண்டிருந்த வேளை, ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அவர்களை வழிமறித்து, தமது கைபேசியில் இளைஞனின் புகைப்படத்தை காட்டி, "இது நீதானே ?" என வினாவியுள்ளனர்.

அதற்கு இளைஞன் ஆம் என்றதும், இளைஞனை பிடித்து தமது மோட்டார் சைக்கிளில் ஏற்ற முற்பட்டுள்ளனர். அதன்போது இளைஞனும் தந்தையும், கடத்தல் கும்பலுடன் முரண்பட்டபோது பொதுமக்கள் அவ்விடத்தில் கூடியதும், மோட்டார் சைக்கிளில் இருவர் தப்பி சென்றுள்ளனர்.

ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து, தடுத்து வைத்திருந்து , யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், பொதுமக்களால் மடக்கி பிடித்து வைக்கப்பட்டிருந்த இளைஞனை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணை செய்து வருகின்றனர். (ம-7,33)

## யாழில் பாகிஸ்...

யாழ்.காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இருவர் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளனர்.

குறித்த பொருட்களுக்கான பணத்தை செலுத்த முற்பட்ட சமயம் சந்தேகம் ஏற்பட்ட நிலையில் விசாரணை செய்ய முற்பட்ட வேளை அவருடன் வருகை தந்த சக பாகிஸ்தான் பிரஜை ஓடியுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் மற்றைய சந்தேகநபரான பாகிஸ்தான் நாட்டுப் பிரஜை பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் பாகிஸ்தான் நாட்டில் இருந்து இலங்கை வந்ததாகவும் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மித்த பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருப்பதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தப்பியோடிய மற்றைய பாகிஸ்தான் பிரஜை தொடர்பில் இதுவரை தகவல் வெளியாகவில்லை. (ம-7,33)

## நிகழ்நிலை...

குறிப்பிட்டுள்ளதாவது,

"சிவில் சமூகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களின் கோரிக்கைகளை உள்ளடக்காமல் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் சாத்தியமான தாக்கம் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

ஜனநாயக விழுமியங்களை ஆபத்தில் தள்ளுவதுடன் தெளிவற்ற மற்றும் மிகையான கடுமையான சட்டங்கள் முதலீடு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்பதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும்.

வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறும், எந்தவொரு சட்டமும் மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் இலங்கையை அமெரிக்கா வலியுறுத்துகிறது என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## இருக்கும்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் போதாது என்றும், கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன.

எனினும், 13ஆவது திருத்தம் இன்று நலிவடைந்திருக்கின்றது என்பதே உண்மை.

ஆனால், 13ஆவது திருத்தத்தில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் உரிய முறையில் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது, அவருக்கும் இதர உறுப்பினர்களுக்கும் இடையிலான கருத்து மோதல்களுக்கும் அரசியல் முரண்பாட்டுக்கும்தான் தமிழ்க் கட்சிகள் முக்கியத்துவம் வழங்கிச் செயற்பட்டன.

எனினும், 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை யாவது உரிய முறையில் பயன்படுத்த எத்தனிக்கவில்லை.

இதனால்தான், வடக்கு மாகாணத்துக்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி, செலவிடப்படாமல் மீளத் திரும்பியது. கிழக்கு மாகாணத்திலும் இதே போன்றதொரு நிலையே இருந்தது.

ஆகவே, இருக்கும் அதிகாரங்களைக்கூட சரிவரப் பயன்படுத்தாமலிருந்து விட்டு கூடுதல் அதிகாரங்களைத் தாருங்கள் என்று கேட்பது பொருத்தமற்றது" என்றார். (ம-7)

## ஏற்று...

வியாழக்கிழமை முற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திறந்த பொருளாதாரத்தில் முழுமையாகப் பயனடையும் வகையில் நாடு முழுவதும் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்கி, தேசிய பொருளாதாரத்தை பத்து மடங்கு மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நான் புதிய வழியில் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தேன். அரசாங்கம் வீழ்ந்த போது எவரும் பொறுப்பேற்க முன்வராத வேளையில், நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

அப்போது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்ததால் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். மக்கள் வாழ்வாதாரத்திற்கு வழி இருக்கவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயு இருக்கவில்லை. அந்த நிலை தொடர்ந்தால் இந்த நாட்டின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும். எனவே, இந்த நாட்டைக் காப்பாற்றி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவும், அதனைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்ததாலும் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

இப்போது இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று படிப்படியாக நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இன்று தட்டுப்பாடுகள் இல்லை. ஆனால் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்போது அந்த நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி வருகிறோம் என்றார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.25
சீட்டிழுப்பு இலக்கம் 0196
X 9 4 5 0 6 5 X

தன நிதானய
திகதி - 2024.01.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1400
G 31 41 67 79 G
43619

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3612
சீட்டிழுப்பு திகதி 25.01.2024
O 14 38 42 60
O 14911

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.25
சீட்டிழுப்பு இலக்கம் 0679
கன்னி 05 17 42 47 கன்னி
10016 19

மஹஜன சம்பத
திகதி 2024/01/25
சீட்டிழுப்பு இலக்கம் 5370
Y 4 6 4 6 8 2

மெகா பவர்
திகதி 25/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1718
T 08 07 20 73 74
60970

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.01.2024 வெற்றி வாரம் 078 வர்ணம் ஊதா
L 0 3 5 0 6 3
43459
27,211,343.20
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2344 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.01.25 தினம் வியாழக்கிழமை
25 49 52 61 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,978,652.00
52142

சனிதா
திகதி 2024.01.25 வெற்றி வாரம் 4505 வர்ணம் சிவப்பு
20 27 44 50 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,183,056.40
21173

சீட்டிழுப்பு வாரம் 4056 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.25 தினம் வியாழக்கிழமை
10 31 35 57 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,338,336.40
181883

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 04 35 43 48 52
1520
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 497,396,176.20
25.01.2024 வியாழன்
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2170
சீட்டிழுப்பு திகதி : 2024.01.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,274,873.60
ADA KOTIPATHI
04 06 45 48 M
643826


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு

**இலவச செயன்முறை வகுப்பு**
**பொறியியல் தொழினுட்பம்**

திகதி - தை 29,30,31 மற்றும் 01 மாசி 2024
நேரம் - காலை 8.30 தொடக்கம் 12.00 வரை

நவீன ஆய்வுகூட வசதிகள் மற்றும்
அனுபவம் மிக்க ஆசிரியர் குழாம்

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை

Phone No: 077 017 5346

(C-8209)


## கொழும்பில்...

இசைஞானி இளையராஜாவின் மகளும் பாடகியுமான பவதாரணி உடல் நலக்குறைவால் கொழும்பில் நேற்று மாலை காலமானார்.

உடல் நலக்குறைவு காரணமாக கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலையில் ஆயுர்வேத சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் அவர் நேற்று காலமானார். கடந்த சில வருடங்களாக பவதாரிணி புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த நிலையில், இலங்கையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

பவதாரணிக்கு தற்போது 47 வயதாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவர் சுமார் 30இற்கும் மேற்பட்ட படங்களில் பல பாடல்களை பாடி பிரபலமானவர்

இதேவேளை இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா மற்றும் அவர் தலைமையிலான தென்னிந்திய திரையுலகின் பிரபல பாடகர்கள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## மாடிவீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் ஒரு பரப்பு காணியில் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு : (18756)

076 742 4301
075 742 1612

## துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
அவுஸ்திரேலியா விசேட சலுகை உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18723)

## வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

2023ஆம் ஆண்டு வரை புலமைப்பரிசில் பரீட்சையில் பெருந்தொகை மாணவர்களின் சித்தியுடன்
2024 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பம்

| 2024 - தரம் 5 | 2024 - தரம் 4 | 2024 - தரம் 3 |
|---|---|---|
| 30 பரீட்சைகள் | 25 பரீட்சைகள் | 20 பரீட்சைகள் |

பரீட்சை நடைபெறும் நாள் - சனிக்கிழமை
பரீட்சை நேரங்கள் - காலை 6.00 - 8.15 | காலை 8.30 - 10.45 | காலை 11.00 - 1.15 | மதியம் - 1.30 - 3.45 | மாலை 4.00 - 6.15
விசேட நேரங்கள் - காலை 5.30 - 7.45 | மதியம் 12.30 - 2.45 | மாலை 6.00 - 8.15 வரை
விரும்பிய நேரங்களில் பரீட்சை எழுத முடியும்

பரீட்சைப் புள்ளிகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க இவ் ஆண்டு முதல் வெற்றித்தேர்வு வினாவிடை வகுப்பும், நுண்ணறிவுப் பரீட்சையும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மூன்று பிரிவுகளாக
தரம் 3, தரம் 4 பி.ப 3.00 - 5.00 பி.ப 5.00 - 7.00 மாலை 6.00 - 8.00
தரம் 5 பி.ப 3.00 - 5.30 பி.ப 5.00 - 7.30 மாலை 6.00 - 8.30
விரும்பிய ஓர் நேரத்தில் கலந்து கொள்ளலாம்.
வினாவிடை வகுப்பிற்கும், நுண்ணறிவுப் பரீட்சைக்கும் மாதாந்தக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

பரீட்சை நிலையம் - நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
தொலைபேசி : 0775388471, 0773126807
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. "வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு"

(C-8206)

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி ரைப்பிங் செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சகல விபரங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

செல்வா ரெலி கொமினிகேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் முன்பாக) (18760)

## மணமகள் தேவை

1978, இந்து கௌரவ குடும்பம், கேட்டை நட்சத்திரமும் 11 சூரியன் செவ்வாய், கிரகபாவம் 56, திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை. (18737)

075 617 8008


## வேலையாட்கள் தேவை (பெண்கள்)

யாழ் நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடல் வேலைக்கு ஆட்கள் (பெண்கள்) தேவை. தங்குமிட வசதியும் உணவு வசதியும் உண்டு. வேலை நேரம் 8 - 5 மணி வரை (பகுதி நேரம் உண்டு) (18744)

077 373 4657
077 906 3338

## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8203)


# 12 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## திருமதி சங்கரி மதிரூபக்குருக்கள்
(ஆசிரியை - யாழ்/திருவடிநிலை சைவத்தமிழ் கலவன் பாடசாலை,
யாழ்/பிளவத்தை அ.மி.த.க பாடசாலை)

சட்டை போட்டு நெற்றியில் பொட்டுமிட்டு
காலில் சலங்கையும் அணிந்து பார்த்தோம்
பட்டு உடுத்தி தலையில் பூச்சூடி - பலவகை
ஆபரணமும் அணிந்து அழகு கண்டோம்
ஈரெட்டு வயதினிலே - இவையெல்லாம்
பார்த்து அக மகிழ்ந்தோம்

பாடசாலைக் கல்வியுடன் - பல வர்ணமயமான
காகிதத்தில் நின் கைவண்ணமும் பார்த்தோம்
இருதொடு ஆறில் பெரியோர், நல்லோர் வாழ்த்த
மாங்கல நாண் பூட்டவும் கண்டோம்
பல்கலையும் கற்று - இருபதொடு எட்டில்
ஆங்கிலத்தில் உயர் பட்டம் பெறுவதையும் கண்டோம்
(17775)

மூபத்து வயதினுள் அம்முவையும்,
ஆசிரியப் பணி புரிவதையும் பார்த்தோம்
பார்போற்ற பெரியோரின் ஆசியுடன் மழலை,
மற்றவர்களுடன் இன்முகத்துடன் பழகி
இலைவாய் நற்காரியம் சாதிக்கும்
அழகையும், திறமையையும் பார்த்தோம்

மழலை அம்முவின் ஆரம்பக்கல்வியை அழகாய்
கற்பிப்பதையும், குருபத்தினியாக்கியும் கண்டோம்
இவைகளையெல்லாம் பார்த்து
நம் மனம் பூரித்தவேளை
சடுதியில் வந்த காய்ச்சலால் - ஐந்துநாளில்
அச்சமின்றி காலன் உன்னுயிர் பறித்தானோ...

**உன் ஆத்மா சாந்தியடைய குளத்தடியானை வேண்டி நிற்கின்றோம்.**

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org